செய்தி வெளியீடு எண் :33 நாள் :18.10.2019

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி,**
**18-ம் கால்வாய், பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களில்**
**ஒரு போக பாசன நிலங்களின் பாசனத்திற்கான தண்ணீரை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்:**

*******

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பெரியாறு அணையிலிருந்து 18-ம் கால்வாய் மற்றும் கம்பம் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால் ஆகியவைகளிலிருந்து ஒரு போக பாசன நிலங்களின் பாசனத்திற்கான தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.10.2019) திறந்து வைத்து, தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருங்குடிமக்களின் கோரிக்கையினை ஏற்று 18-ம் (பி.டி.ஆர் பழனிவேல் ராஜன்) கால்வாய் மற்றும் பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களில் ஒரு போக பாசன நிலங்களின் பாசனத்திற்காக தண்ணீரை திறந்து விட உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில், இன்றைய தினம் ஒரு போக பாசன நிலங்கள் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

விவசாயிகள் பயன்பெறும் வகையில், 18-ம் கால்வாயில் திறந்து விடப்படும் தண்ணீர் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, பண்ணைப்புரம், கோம்பை, தேவாரம், தே.சிந்தலைச்சேரி, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, பொட்டிபுரம், லட்சுமிநாயக்கன்பட்டி மற்றும் போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட மீனாட்சிபுரம், டொம்புச்சேரி, கோடாங்கிபட்டி ஆகிய கிராமங்களை சுற்றி உள்ள 4614.25 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் இன்று முதல் 30 தினங்களுக்கு விநாடிக்கு 98 கனஅடி வீதம், மொத்தம் 255 மில்லியன் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அதனைப்போன்று, பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால் திறந்து விடப்படும் தண்ணீர் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட சின்னமனூர், வேப்பம்பட்டி ஆகிய கிராமங்களைச் சுற்றிலுள்ள 830 ஏக்கர் நிலங்களும், தேனி வட்டத்திற்குட்பட்ட சீலையம்பட்டி, சீப்பாலக்கோட்டை, பூமலைக்குண்டு, தர்மாபுரி, தாடிச்சேரி, வெங்கடாசலபுரம், கொடுவிலார்பட்டி, ஜங்கால்பட்டி, கோவிந்தநகரம் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களைச் சுற்றி உள்ள 4316 ஏக்கர் நிலங்களும் என பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்காலில் உள்ள மொத்தம் 5146 ஏக்கர் நிலங்களில் 468 ஏக்கர் நன்செய் நிலங்களும், 4678 ஏக்கர் புன்செய் நிலங்களும் பாசன வசதி பெறும் வகையில் இன்று முதல் 120 தினங்களுக்கு வினாடிக்கு 100 கனஅடி வீதம் மொத்தம் 1037 மில்லியன் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

*எனவே, 18-ம் கால்வாய் மற்றும் பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரை வேளாண் பெருங்குடி மக்கள் சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற்று பயனடைய வேண்டும் என தெரிவித்தார்.*

*இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, உத்தமபாளையம் சார் ஆட்சியர் டாக்டர் ஆர்.வைத்திநாதன், இ.ஆ.ப., செயற்பொறியாளர் எஸ்.கவிதா, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) செயற்பொறியாளர்கள் அன்புசெல்வன், கார்த்திகேயன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***